# இவற்றை அறிவோம்

PUBLIC LIBRARY
KARAVAKKU NORTH
MARUTHAMUNAI

ஆக்கம் : M. A. அப்துல் கனி

( பதிப்புரிமை பெற்றது )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது
பட்டின ச
கல்முனை

பெயர்;

விலாசம்

அ. இலக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARAVAKU NORTH
MARUTHAMUNAI

# இவற்றை அறிவோம்

HATHEE BOOK DEPOT
ISLAMIC BOOKS & SCHOOL BOOKS
52/7, 2nd CROSS STREET
COLOMBO - 11
T. P: 697768

2-97
கனி

ஆக்கம்

M. A. அப்துல் கனி

4966

( பதிப்புரிமை பெற்றது )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அயலூரில் நான் கல்வி கற்கும்போது அடிக்கடி அங்கு வந்து என்னைச் சந்தித்து என் நலம் விசாரித்த எங்கள் சகோதரன் மர்ஹூம் M. A. அப்துல் கபூர் அவர்கட்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

அறிவு தேடுவதை இஸ்லாம் மிகவும் வலியுறுத்து கிறது. முதன்முதலாக அருளப்பட்ட அல்குர்ஆன் வசனமே கல்வி சம்பந்தமானதெனில். அறிவைத் தேடிப்பெறுவதில் நாம் எவ்வளவு அக்கறை காட்டவேண்டும் என்பது தெளி வாகிறது.

எமது பகுதியில் இது கல்வி ஆண்டாயிற்றே; ஆசிரியராகிய நாம் இதற்காக என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வி எனக்குள்ளேயே எழுந்தது "நம்மிடம் இருக் கும் குறிப்புகளைத் திரட்டியெடுத்து ஒரு நூலாக்குவோம்" என்ற விடையும் எனக்குள்ளே தோன்றியது. எனவே, '**இவற்றை அறிவோம்**' என்னும் இந் நூலை இயற்ற இறைவன் அருள்புரிந்தான். (அல்ஹம்துலில்லாஹ்) வாசிப் பவர்களெல்லோரும் பயன் பெறுவீர்களாக!

கைப்பிரதியை வாசித்துவிட்டு எனக்கு உற்சாக மூட்டியதுடன் நூலாக்குவதற்கு அணிந்துரையும் வழங் கிய எமது உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் T. இப்றாலெப்பை B. A. Dip. in Edu. ( S. L. E. A. S. 2 ) அவர்கட்கும், அச்சிடுவதற்கு முன் நல்ல ஆலோசனைகள் வழங்கிய எமது கொத்தணி அதிபர் ஜனாப் M.A. உதுமா லெப்பை B. A. Dip. in Edu. அவர்கட்கும், அங்கத்துவப் பாடசாலை அதிபர்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன். இதனை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த IPC அச்சகத் தாருக்கும் என் இதயங்கனிந்த நன்றி.

M. A. அப்துல் கனி.

அக்கரைப்பற்று - 5
*11 - 1 - 1991.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்றுக் கோட்டக்கல்விப் பணிமனை உதவிக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் T. இப்றாலெப்பை B. A. Dip. in Edu.(S.L.E.A.S. 2)அவர்கள் அன்போடளித்து உதவிய

# அணிந்துரை

இவ்வாண்டு 'கல்வி ஆண்டு' என நாம் பிரகடனப்படுத்தியுள்ள இவ்வேளையில், மாணவர்களின் உயர் கல்விக்கு உதவக்கூடிய விடயங்களை உள்ளடக்கியதாய் வெளிவரும் இந் நூலுக்கு அகமகிழ்வோடு இவ் அணிந்துரையை வழங்குகிறேன்.

'**இவற்றை அறிவோம்**' என்னும் இந் நூல், உருவத்தில் சிறியது, ஆனால்; கொண்டுள்ள உள்ளடக்கமோ பெரியது. இதன் ஆசிரியர் இதற்கு முன்பு *(1)*இஸ்லாமும் கிறிஸ்தவமும் இணைந்தால்! *(2)* WEST GRASPS ISLAM *(3)* இஸ்லாம் தந்த விஞ்ஞானம், ஆகிய ஆராய்ச்சி நூல்களை எழுதி, கல்வி உலகிற்கு ஆக்கபூர்வமான பங்கினை அளித்துள்ளார். இந் நூலும் அதே வரிசையில் சேர்க்கப்படவேண்டியதுடன் பாராட்டப்படவேண்டியதுமாகும்.

இதனை யாவரும் வாசித்துப் பயனடைய வேண்டும் என்பதே எனது அவா. ஆசிரிய நண்பர் ஜனாப் M.A. அப்துல் கனி அவர்கள் இவ்விதமான ஆக்கவேலைகளில் தொடர்ந்து சேவை செய்ய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

T. இப்றாலெப்பை

கோட்டக்கல்வி அலுவலகம்,
அக்கரைப்பற்று.

*05- 01- 1991*

297
4766
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KA( KU NORTH
...... JA .UNAI

1. இஸ்லாத்தில் ''ஏழு'' என்ற எண் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. எவ்வகையிலெனில் :- வானம் 7, பூமி 7, கடல் 7, கோ க 7, ஹஜ்ஜுடைய செயல்கள் 7, சபா ர்வா ஓட்டம் 7. முஸ்தலிபாவில் எறியப்படும் கற்களின் எண்ணிக்கை 7, கஃபதுல்லாவை வலம்வரும் எண்ணிக்கை 7, அல்ஹம்து சூறாவிலுள்ள வசனங்க 7, அல்-குர்ஆனில் ஹாமீம் என்று தொடங்கும் அத்தியாயங்கள் 7, அல்-குர்ஆனை ஓதவேண்டிய தஜ்வீத் முறை 7, அல்குர் ஆனிலுள்ள மன்ஸில்கள் 7, அஷ்ஷம்ஸ் என்ற அத்தியாயத்தில் இறைவன் சத்தியம் செய்யும் பொருட்கள் 7, நபி யூசுப் (அலை) அவர்களுடைய காலத்தில் நல்ல விளைச்சல் உண்டான வருடங்கள் 7, அதன்பின் பஞ்சம் உண்டான வருடங்கள் 7, அந்த நபியவர்கள் சிறையிருந்த வருடங்கள் 7, நரகத்தின் நாமங்கள் 7, அதன் வாயில்கள் 7, சொர்க்கத்தின் நாமங்கள் 7, அதன் வாயில்கள் 7, ஆத் கூட்டத்தினரை அழிப்பதற்காக சூறாவளி வீசிய நாட்கள் 7, கலிமாவிலுள்ள சொற்கள் 7, தொழுகையின் செயல்கள் 7, சுஜூது செய்யும் போது நிலத்தில் உராய்ந்து கொள்ளும் உறுப்புகள் 7, நாட்கள் 7, நஃப்ஸ் 7, திக்று 7 .........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அகிலத்தாருக்கு அருளப்பட்ட அல்குர்ஆனில்;-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நுக்கத்தா | ... | 105684 | அட்சரங்கள் | ... | 322670 |
| சேர் | ... | 39582 | சொற்கள் | ... | 86430 |
| ஸபர் | ... | 53243 | வசனங்கள் | ... | 6666 |

| | | |
|---|---|---|
| ஏவல் வசனங்கள் | ...... | 1000 |
| விலக்கல் ,, | ...... | 1000 |
| உவமான உவமேய வசனங்கள் | ...... | 1000 |
| இறைவனின் வாக்குறுதி ,, | ...... | 1000 |
| இறைவனின் அச்சுறுத்தல் வசனங்கள் | ...... | 1000 |
| முந்நிகழ்ந்த செய்திகளைப்பற்றிய வசன. | | 500 |
| செய்வதற்கு ஆகுமான விடயம் பற்றியவை | | 500 |
| செய்வதற்கு ஆகாத ,, ,, | | 500 |
| இறைவனைத் துதி செய்யும் வகையிலா. | | 100 |
| நானாவித வசனங்கள் | ...... | 66 |

3. முன்கர், நகீர் (அலை) ஆகிய இரு அமரர்களும் கப்றில் எம்மிடம் கேள்விகள் கேட்கும் போது தங்களுடன் கொண்டுவரும் இரும்புத் தடி 'மித்ரகா' என்று அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4, ஆகக்கடைசியாக மரணித்த சஹாபாவின் பெயர்; ஆமர் இப்னு வதீல் அஸ்கினானி அபு துபைல் என்பதாகும்.

5, நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பலைச் செய்வதற்கு உதவிய தச்சனின் பெயர்: ஊஜ் இப்னு அனூகு என்பதாகும்

6, நபி சாலிஹ் (அலை) அவர்களின் விநோத ஒட்டகையைக் கொன்றவனின் பெயர்: உஹைமிர் என்பதாகும்

7' நபி இஸ்மாயில் (அலை) அவர்களின் மூத்த மனைவியின் நாமம் அம்ரா எனப்படும்,

8. ஹிஜ்ரி 322ல் மரணித்த அபூவக்கர் அல்- கத்தானி என்பவர் புனித ஹஜ் வணக்கத்தை நிறைவேற்ற பிரயாணத்தை மேற்கொண்டார். தனது வயோதிபத் தாயாரின் நினைவு இடைவழியில் உண்டாகவே, பயணத்தை இரத்துச் செய்துவிட்டு, தாய்க்கு ஊழியஞ் செய்வதற்காக வீடு திரும்பினார்.

9. சதா பிரயாணஞ் செய்வதில் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர்கள் என்ற பெருமையைத் தேடிக் கொண்டவர்களில், ஐவரின் நாமங்கள் இஸ்லாமியச் சரிதையில் இடம் பெறுகின்றன.

1. இப்னு பதூதா.
2. இப்னு ஹவ்க்கல்.
3. பிரீஷ்தா.
4. சுலைமான் அல்- மாஹிரி.
5. அபூ துலாஃப் இப்னு முஹல்ஹீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மொறோக்கோ நாட்டைச் சேர்ந்த இப்னு பதூதா என்பவர் (கி. பி 1304 - 1377) உலகப் புகழ் பெற்ற ஒரு பிரயாணி ஆவார். அவர் தனது 21 வது வயதில் 'உலகம் சுற்றும் பிரயாணம்' ஒன்றை மேற்கொண்டார்; 45 வது வயதில் அவரின் தாய் நாட்டின் தலைநகரான FES என்ற ஊரை வந்தடைந் தார். அப் பிரயாணத்தில் அவர் 60 அரசர்களையும், ஆயிரக்கணக்கான பிரமுகர்களையும் சந்தித்தார். அவர்களுள், சுமார் 2000 நபர்களைப் பற்றித் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கி. பி. 1352ல் இவர் மீண்டும் ஒரு குட்டிப் பய ணத்தை ஆரம்பித்தார். சஹாராப் பாலைவனத்தை கடந்து, ஸ்பெயின் நாட்டில் சுற்றித்திரிந்து, ஈற்றில் தாயகம் திரும்பினார். தனது பிரயாணத்தில் 'பஸ்றா' என்ற தலைநகரிலுள்ள ஒரு பள்ளி வாச லுக்குச் சென்ற போது; ஹஸ்றத் உதுமான் (ரலி) அவர்கள் விஷமிகளால் கொல்லப்படும்வேளை அவர் ஓதிக் கொண்டிருந்த அல்- குர்ஆன் பிரதியை அங்கே கண்டதாகவும்; அல்- குர்ஆன் 2ம் அத்தியாயத்தின் 131ம் வசனம் உள்ள இடத்தில் இரத்தக்கறை படிந் திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப் பிடப்பட்ட இந்த அல்- குர்ஆன் பிரதியானது, இன் றும் U. S. S. R. நாட்டிலிலுள்ள உஸ்பெக்ஸ்தான் நகரில் அமைந்துள்ள நூதனசாலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்னு பதூதா அவர்களைப்பற்றி பிரித்தானியக் கலைக்களஞ்சியம் புகழ்ந்து கூறும் போது, ''அவர் 28 வருடங்களில் மொத்தம் 75,000 மைல் பிரயாணஞ் செய்துள்ளார்'' என்றும்; ''இலங்கையை ஆட்சி செய்த இரு அரசர்களுக்கிடையே நடைபெற்ற யுத்தம் ஒன்றைப்பற்றித் தனது நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார்'' என்றும்; ''இலங்கையின் தென்கரையோரப் பகுதியிலுள்ள காலி என்ற ஊரைப்பற்றி அவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளபடியினால் கண்டிப்பாக அவர் இலங்கைக்கு வருகை தந்திருக்க வேண்டும்'' எனவும் கூறுகிறது

11. கி. பி. 10ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரேபியாவில் சீவித்த அபுல் ஹசன் அலி இப்னு அல்மசூதி எனப் பெயர் கொண்ட சரித்திர ஆசிரியர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

( ஆதாரம் : பிரித்தானியக் கலைக்களஞ்சியம் )

12. கி.பி. 970 - 1040 ஆண்டுகளில் சீவித்த அபூறைஹான் முஹம்மது அல் பிறூணி என்பவர் பாரசீகப் பரம்பரையிற் பிறந்த ஓர் அராபிய அறிஞராவார். இவர் இந்தியாவுக்கு வந்து கிரேக்க தத்துவம் கற்பித்தார்.

( ஆதாரம் : பிரித்தானியக் கலைக்களஞ்சியம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ''மனிதனும் வானில் பறக்கலாம்'' என்பதனைச் செயலில் காட்டியவர்கள் முஸ்லிம்கள் என்றே கூற லாம். 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த அபுல் காஸிம் அப்பாஸ் இப்னு பிர்னாஸ் என்ற அராபியர் சிறகு போன்ற ஓர் அமைப்பைச் செய்து, அதைத் தன்னில் பொருத்தி, அன்று பறந்து காட்டினார். இறங்குவதில் போதிய தேர்ச்சி இல்லாததின் காரணமாக அவர் கீழே வீழ்ந்து கி. பி. 888ல் மரணமானார்.

14. அக்கால அறபு மக்களிடையே அபூகிறாஸ் எனப் பெயர்கொண்ட ஒருவர் இருந்தார் அவர் குதிரை யைப் போன்று வேகமாக ஓடக்கூடியவராம். தூர இடங்களுக்கு அனுப்ப வேண்டிய சில செய்திகள் அவர் மூலமாகவே அனுப்பப்பட்டனவாம்.

15. கி.பி. 721-815 காலப்பகுதியில் வாழ்ந்த அபூ மூஸா ஜாபிர் இப்னு ஹய்யான் என்பவர் மாபெரும் இரசா யன மேதையாவார். இவர் பல பாகங்களைக் கொண்ட அதிக நூற்றொகுதிகளை எழுதிய ஒரு தொடர் எழுத்தாளர் ஆவார். ''நைற்றிக் அமிலத்தை முதன் முதலாகத் தயாரித்தவர் இவரே'' என்று பிரித்தானி யக் கலைக்களஞ்சியம் புகழ்கிறது. மட்டுமல்ல, STANLEY LANE POOLE என்ற அறிஞர் இவரைப் பற்றிக் குறிப்பிடுகையில், ''இரசாயனத்தில் மட்டும் 500 நூல்கள் எழுதியுள்ளார்'' என்று புகழ்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC ... KU NORTH
K/... ...THAMUNAI



16. கி.பி. 885-940 காலப் பகுதியில் வாழ்ந்த முஹம்மது அபூபக்கர் இப்னு ஹபீப் முஹம்மது அபுல் காஸிம் அல் அன்பாரீ என்பவர் அறபு இலக்கியத்தில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவராவார். இவருடைய நூல்களில் 'அஸ்ஸாஹிர்' என்பது மிகவும் பிரபல்யமானதாகும். அல்-ஹதீஸ் கலையில் காணப்படும் அரும் சொற்பிரயோகத்தைப்பற்றி 'கரீபுல் ஹதீது' என்ற தலைப்பில் சுமார் 45,000 பக்கங்களைக் கொண்ட ஒரு நூல் எழுதியுள்ளார்.

17. அபூ தாலிப் முஹம்மது அத்தார் என்பவர் புகழ்பெற்ற ஒரு பாரசீகக் கவிஞர். நிசாப்பூர் எனும் ஊருக்குப் பக்கத்தேயுள்ள கெர்கன் என்னும் சிற்றூரில் ஹிஜ்ரி 513ம் வருடம் ஷஃபான் மாதம் பிறந்தார். இவர் பரீதுத்தீன் என்னும் புனைப்பெயரால் அழைக்கப்பட்டார். இவருடைய வயது 114 ஆகும்; வயதின் எண்ணிக்கைக்கு ஒப்ப 114 நூல்கள் எழுதியுள்ளார். அவற்றில் 40 நூல்களில் மொத்தம் 2,02,000 செய்யுட்களை இயற்றியுள்ளார். அவருடைய நூல்களில் 'மந்திக்குத் தைர்' என்பது 4600 செய்யுட்களைக் கொண்ட ஒரு தனிக் காப்பியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கி. பி. 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த அஹ்மத் இப்னு அப்துல் மஜீத் என்பவர் மிகவும் கீர்த்தி வாய்ந்த ஒரு கடற் பிரயாணி ஆவார். அரேபியரின் கடல் மார்க்கத்தைப் பாவிப்பதற்கு ஐரோப்பியர் பயந்த காலம் அது. கி.பி. 1498ல் வஸ்கோடிகமா இந்தியாவுக்கு வந்தபோது, கள்ளிக்கோட்டை வரை அப்துல் மஜீத் அவர்களே வழிகாட்டியாக இருந்து வஸ்கோடிகமாவுக்கு உதவி புரிந்துள்ளார்.

( ஆதாரம் : இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் )

19. முஹம்மது நபி( ஸல் ) அவர்களுடைய ஆரம்ப காலத்தில் பாப்பரசராக இருந்த ஒருவர் : PELAGIUS II ( கி. பி. 579 - 590 )

20. முஹம்மது நபி ( ஸல் ) அவர்களுடைய அந்திம காலத்தில் பாப்பரசராக இருந்த ஒருவர் :

21. ஏறக்குறைய ஆயிரம் வருடங்கள் சீவித்த நபிமார்கள்

★ நபி ஆதம் ( அலை ) 930 வருடங்கள்.
★ நபி ஷீத் ( அலை ) 912 ,,
★ நபி இத்ரீஸ் ( அலை ) 905 ,,
★ நபி நூஹ் ( அலை ) 950 ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARAVAKU NORTH
NALLUTHANUNAI

22. சிலநாடுகளுக்கு முன்பு வழங்கப் பட்டிருந்த பெயர்கள்

*(1)* உஸ்பெக்ஸ்த்தான்:- குவாறிஸ்ம்

*(2)* ஈரான்:- அந்தலூசியா

*(3)* சூடான்:- தானெஹசு, நூபியா

*(4)* டமாஸ்கஸ்:- திமஷ் குஷ்ஷாம், திமஷ்குஷ்

*(5)* எதியோபியா:- அக்சும், அபிசீனியா, பபிலோன்

*(6)* சமர்கந்த்:- அப்பிராசியம், மரகந்தா, செமிஸ்கந்த்

23. அயல் நாட்டுத் தலைவர்கள் அன்றைய முஸ்லிம் ஆட்சியாளர்களைச் சந்திக்க வந்தபொழுது, ஆடம்பரமற்ற அந்த இஸ்லாமியத் தலைவர்களின் எழுமையான வாழ்க்கையின் எதிரொலியாக, இஸ்லாம் என்ற விருட்சம் அன்று தானாகவே தளிர்விட்டுத் தழைத்தோங்கியது. ஆனால் இன்று, அயல் நாட்டுத் தலைவர்களை முஸ்லிம் ஆட்சியாளர்கள் சந்திக்கச் செல்லும் போது அவர்களின் (இஸ்லாமிய ஆட்சியாளரின்) இடாம்பீக வாழ்வின் எதிரொலியாக இஸ்லாம் கருகிப் போகிறது. அந்தோ இஸ்லாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY



24. ஆடம்பரம், படாடோபம், ஆகியவற்றை வாழ்க்கையில் புகுத்தி, அதனால் ஆட்சியில் கவனஞ் செலுத்தாது வேடிக்கையிலும் கேளிக்கையிலும் ஈடுபட்டதினால் மக்களின் வெறுப்புக்குள்ளாகி, ஈற்றில் நாடு கடத்தப்பட்ட இஸ்லாமிய மன்னர்கள் இருவரின் சோகக்கதை இந் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இரண்டு இடம் பெற்றுள்ளன.

1. எகிப்து நாட்டில்- பாறுக் மன்னன்.(கி.பி,1956)

2. ஈரான் நாட்டில்- ஷா மன்னன்.(கி.பி.1979)

25. மறுமைக்குரிய சாதனம் ஏதுமின்றி மண்ணறைக்குள் பிரவேசிப்பவர் கப்பலின்றி கடல்கடப்பவர் போலாவார்

26. சந்தோசத்துடன் பாவம் செய்பவன் அழுதுகொண்டு நரகம் புகுவான்; கஷ்டத்துடன் நன்மை செய்பவன் சிரித்துக் கொண்டு சொர்க்கம் புகுவான்.

27. பிணி, வறுமை, பொறுமை, ஆகிய மூன்றும் அல்லாஹ்வின் பொக்கிஷங்களில் உள்ளவையாகும். இறைவன் நாடியவர்களுக்கே இவற்றைக் கொடுக்கிறான்.

28. ஒருவனுக்குக் கிடைக்கும் பெருஞ்செல்வம் அல்லாஹ்வின் றஹ்மத்தைக் கொண்டும் கிடைக்கிறது, அவனின் லஃனத்தைக் கொண்டும் கிடைக்கிறது. யாருக்கு? எவ்வகை? என்பதை யாராலுமே அறிய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. அடக்கஞ் செய்யப்பட்ட ஒரு பிரேதத்தை நோக்கி, நீ எங்கே சீவிக்கின்றாய்? என்ன செய்கின்றாய்? எதை அணிகின்றாய்? எதைப் புசிக்கின்றாய் என்று நாம் கேட்டால் :

1. மண்ணறையில் சீவிக்கின்றேன்.
2. மறுமையைப்பற்றி சிந்திக்கின்றேன்.
3. கபன் சீலையை அணிகின்றேன்.
4. மரணத்தைப் புசிக்கின்றேன் ........ என்றுதானே அது பதில் கூறும்?

30 " மன இச்சையால் இழைக்கப்படும் பாவம் சிலவேளை மன்னிக்கப்படலாம் " என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், " கர்வத்தால் செய்யும் பாவம் மன்னிக்கப் படும் ,, என்பதனை நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், ஆதி பிதா நபி ஆதம் ( அலை ) அவர்களுடைய பாவம் மன இச்சையால் ஏற்பட்டது; அது மன்னிக்கப்பட்டுவிட்டது. ஆனால், இப்லீஸுடைய பாவம் கர்வத்தால் விளைந்தது, இன்னும் அது மன்னிக்கப்படவே இல்லை,

31. கியாம நாளில் நடைபெறும் விசாரணையின் போது தங்களுக்கு இருந்த கஷ்ட நிலைகளை எடுத்துக் கூறி இறைவனின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளச் சிலர் வழிவகை தேடுவார்கள். அப்போது இறைவன், நான்கு வகையினருக்கு நான்கு நபிமார்களை உதாரணங்காட்டி விசாரணையை மேற்கொள்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அரசர்களுக்கும், செல்வந்தர்களுக்கும்
நபி சுலைமான் ( அலை )
2. அடிமைகளுக்கும், தொழில் புரிவோர்களுக்கும்
நபி யூசுப் ( அலை )
3. நோயாளிகளுக்கும் நலிவுற்றோர்களுக்கும்
நபி ஐயூப் ( அலை )
4. ஏழைகளுக்கும், பரதேசிகளுக்கும்
நபி ஈஸா ( அலை )

32. காமம் அரசனை அடிமையாக்கும்; பொறுமை அடிமையை அரசனாக்கும். ' யூசுப் சுலைகா ' சரிதையில் இரண்டுக்கும் உதாரணம் உண்டு.

33. சிறு தவறுகளை அலட்சியமாகக் கொள்ள வேண்டாம் ஏனெனில், அவைகளில் இருந்துதான் பெரிய தவறுகள் உண்டாகின்றன. ஆலை விருட்சம் இதற்கோர் அழகான எடுத்துக் காட்டாகும்.

34. இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட இடங்களில் வாழும் இலங்கை முஸ்லிம்களை வெளியேற்றும்படி நாலாம் பிலிப் மன்னன் உத்தரவு பிறப்பித்தான். முஸ்லிம்கள் மீது அன்பு கொண்டிருந்த கண்டி மன்னன் சேனரதன் என்பவன் முஸ்லிம்களை ஆதரித்து, மட்டக்களப்புக்கு அருகாமையிலுள்ள பகுதிகளில் குடியமர்த்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. கொழும்பை ஆட்சி செய்த புவனேகபாகு என்ற அரசன் தனது பேரனாகிய தர்மபாலன் ஆட்சி பீடம் ஏற விரும்பி, போத்துக்கேய அரசன் மூன்றாம் ஜோர்ஜ் மன்னனின் உதவியை நாடினான். அவ் உதவிக்குக் கைமாறாக, கத்தோலிக்க மதத்தை இலங்கையிற் பரப்புவதற்கு நம் மன்னன் அனுமதிவழங்கினான். பாதிரிமார் இலங்கைக்கு வந்தார்கள். தர்மபாலனும் கத்தோலிக்க மதத்தைத் தழுவினான். அதனைபடுத்து, அதிகமான பௌத்தர்களும், ஹிந்துக்களும் மதம் மாறினார்கள்.

36. இறைவன் இட்ட கட்டளையின்படி நபி மூஸா (அலை) அவர்கள் கன்னான் என்ற தேசத்திலிருந்து பெரும் மக்கள் கூட்டம் ஒன்றை அழைத்துக்கொண்டு வேறு நாடொன்றுக்குச் சென்ற சரிதை பைபிளிலும் அல்-குர்ஆனிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நிகழ்ச்சி நடைபெற்ற சரியான காலநிர்ணயம் இருவேத நூல்களிலும் குறிப்பிடப்படவில்லை. மார்க்க ஆய்வாளரான J. DE MICELI என்பவர் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில், ''இந்நிகழ்ச்சி கி. மு. 1495 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ம் நாள் நடைபெற்றிருக்கவேண்டும்'' எனக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. பிர்அவ்ன் என்பது குறிப்பிடப்பட்ட ஓர் அரசனின் நாமமல்ல. அது ஓர் அரச குடும்பத்தின் பரம்பரைப் பெயராகும். நபிமூஸா (அலை) அவர்களோடு எதிர்த்து நின்று. ஈற்றில் கடலில் மூழ்கடிக்கப்பட்ட பிர்அவ்ன் யார்? என்பது புரியாத புதிராகவே இருந்துவந்துள்ளது இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் சீவித்த MASPERO என்ற ஆய்வாளர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், '' இரண்டாம் RAMESSES என்பவனின் மகனான MERNEPTAH என்பவனே கடலில் மூழ்கடிக்கப்பட்ட பிர்அவ்ன் '' என்று கருத்து வெளியிடுகின்றார். ABBE H. LESTER என்ற ஆய்வாளர் இக் கூற்றினை வலியுறுத்துகின்றார்.

38. மேலே கூறப்பட்ட பிர்அவ்னின் பூதவுடல் LORET என்பவரால் கி. பி. 1898ம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டு எகிப்தின் நூதனசாலைக்கு ஒப்படைக்கப்பட்டது. விஞ்ஞானிகள் இவ்வுடலைப்பற்றி ஆய்வு நடத்தினார்கள். வைத்தியக் கலாநிதி MAURICE BUCAILLE என்பவர் ( விஞ்ஞான ஒளியில் பைபிளும் குர்ஆனும் என்ற நூலின் ஆசிரியர் ) எகிப்து அரசாங்கத்தின் அனுமதி பெற்று, கி. பி. 1975ம் ஆண்டு ஜூன் மாதம், வைத்தியர் குழு ஒன்றின் உதவியுடன் அந்த உடலைப் பரிசோதனை செய்தார். அந்தக் குழுவில் Professor MIGNOT, Professor CECCALDI, Dr. DURIGON Dr.EL MELIGY, Dr.RAMSIYS, Dr.MANIALAWIY ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARAVAKU NORTH
NALLUTHANNAI
4966

39. இஸ்லாத்தைப் பற்றியும், முஹம்மது நபி ( ஸல் ) அவர்களைப் பற்றியும் முஸ்லிம் அல்லாதோர் பலர் (குறிப்பாக மேனாட்டவர் ) நூல்கள் எழுதி யுள்ளார்கள். யாம் அறிந்தவரை சுமார் நூறு நபர்கள் இவ்விதமான நூல்களை எழுதி யுள்ளார்கள், அந்த அறிஞர்களில் சிலருடைய கருத்தை இங்கு காண்போம்.

( a ) MICHAEL H. HART என்ற அமெரிக்கர் ஒரு கணித மேதையும், வானசாஸ்திரியும், கதாசிரியரும் ஆவார். ''THE BEST 100'' என்ற தலைப்பில் 572 பக்கங்களைக் கொண்ட ஒரு நூலை இவர் எழுதியுள்ளார். இந் நூல் ''100 பேர்'' என்ற தலைப்பில் 1986ம் ஆண்டு தமிழில் அச்சிடப்பட்டுள்ளது. இந் நூலின் சுருக்கம் என்னவெனில்:- இதுவரை உலகில் உதித்த உத்தம மனிதர்களில் 100 நபர்களை அவர் தேர்ந்தெடுத்து, அவர்களைப்பற்றிச் சுருக்கமாக அதில் கூறியுள்ளார். யார் முதலாவது ? என்ற கேள்வி அவருக்குப் பெரும் சங்கடமாக இருந்ததாம். எனவே அவர், வரைபடம் போன்று ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதனுதவியால் புள்ளியிட்டு, நூதனமாக மேதைகளைத் தேர்ந்தெடுத்துள்ளார். அவ்வாறு தேர்வு செய்ததில் முஹமது நபி (ஸல்) அவர்களே முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருடைய நூலில் இடம் பெற்றவாறு முதல் மூவரையும் இறுதி மூவரையும் இங்கு காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. முஹம்மது நபி — 98. பாப்லோ பிகாசோ
2. சேர் ஐசக் நியூட்டன் — 99. மகா வீரர்
3. இயேசு நாதர் — 100. நீல் பொஹ்ர்

இந்த 100 பேர்களில்: ஆபிரகாம் லிங்கன், பென்ஜமின் பிராங்லின், மகாத்மாகாந்தி போன்றோர் இடம் பெறவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

(b) LAMARTINE என்பவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சரித்திர ஆசிரியர். 'துருக்கியரின் சரிதை' எனும் நூலில் முஹம்மது நபி பற்றி; "மனிதனின் தன்மைகளை மதிப்பிடக்கூடிய ஒரு சாதனம் எம்மிடம் இருக்குமாயின், முஹம்மது நபியைப் பார்க்கினும் உயர்ந்த மனிதர் ஒருவர் இருக்கின்றாரா? என்ற கேள்வியை நாம் கேட்கவேண்டி நேரிடும்" என்று கூறுகின்றார்.

(c) JULES MASSERMAN என்பவர் அமெரிக்காவைச்சேர்ந்த ஓர் உளவியல் பகுப்பாய்வாளர். அவர் அந்த நாட்டின் TIMES பத்திரிகையில் Where are the Leaders? என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். (15.7.1974 வெளியீடு) அதிலே முஹம்மது நபி (ஸல்) அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில், "எல்லாக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒரேயொரு தலைவர் முஹம்மதே" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( d ) HOMI J. RUSTOMJI ( Bar- at- law ) என்பவர் முஹம்மது நபி ( ஸல் ) அவர்களைப்பற்றி Wisdom of Prophet Mohammed என்னும் நூலில் குறிப்பிடு கையில்: '' உயர்வு தாழ்வு என்பதனை அறவே நீக்கி, மனிதர்கள் அனைவரும் சமம் என்ற தத்துவத்தை உண்மையில் நிலைநிறுத்திய தலைவர் முஹம்மது நபியவர்களே. அவர், அரசர்கள் மத்தியில் அரசர் களின் அரசனாகவும், ஏழைகள் மத்தியில் ஏழைகளின் ஏழையாகவும் காணப்பட்டார். யான் அறிந்த வரை இஸ்லாம் போதிக்கும் சமத்துவம் வேறு எந்த ஒரு வேதத்திலும் போதிக்கப்படவில்லை '' என்று கூறு கின்றார்.

( e ) SAROJINI NAIDU:- '' ஜனநாயகம் என்பதை முதன்முதலாகப் போதித்தது இஸ்லாம் மார்க்கமே எவ்விதமெனில்: அவர்களின் தொழுகைக்கான அதான் என்னும் அழைப்பு விடுக்கப்பட்டதும், அரசனும் ஆண்டியும் பக்கத்தே நின்று தோளோடு தோள் உராயும்படி தொழுகையை நிறைவேற்றுவதன் மூலம் எமக்கு இது புலனாகிறது. மட்டுமல்ல, மக்கள் அனை வரும் ஒருவருக்கொருவர் உண்மைச் சகோதரர் என்ற சமத்துவமும் இங்கு வெளிப்படுத்தப்படுகிறது '' என்று கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற வந்த ஹாஜிமார் அறுக்கும் கால்நடைகளை அள்ளிக்கொண்டோட அன்று ஆயிரக்கணக்கான அரேபியர் அணியணியாய் நின்றனர். ஆனால் இன்றோ அந் நிலை மாறிவிட்டது. காரணம்? ஆமாம், எண்ணெய் வளம் தான். இந்த எண்ணெய் வளத்தைப்பற்றி இனிய சில தகவல்களை இங்கு காண்போம்.

கி. பி. 1933ம் ஆண்டு, இப்னு சுஊத் என்றழைக்கப் பட்ட மன்னர் அப்துல் அஸீஸ் அவர்கள், அமெரிக்க எண்ணெய்க் கம்பனி ஒன்றுடன் 'எண்ணெய் கண்டுபிடிக்கும் ஒப்பந்தம்' ஒன்றைச் செய்தார். ஒப்பந்தத்தின் பிரகாரம் அமெரிக்க ஆய்வாளர்கள் சவூதிக்கு வந்து எண்ணெய் ஆராய்ச்சியை மேற்கொண்டார்கள். அவ்வேளை, 'இரண்டாவது மகா யுத்தம்' ஆரம்பமாயிற்று. வேலைகள் அனைத்தும் அப்படியே ஸ்தம்பித நிலை அடைந்துவிட்டது.

போருக்குப் பின் அகழ்வு வேலைகள் ஆரம்பமாயின. ஆயிரக்கணக்கான நபிமார்களின் அடிச்சுவடுகள் பதிந்த இடமல்லவா அது? மட்டுமல்ல, குழந்தையாக இருந்த இஸ்மாயில் நபியவர்களின் குதிகால் உதைப்புக்குக் குபீர் குபீர் என நீர் வழிந்தோடிய இடமும் அல்லவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ? அதேபோல் எண்ணெய்யும் பீறிட்டுப் பாயத் தொடங்கியது : கேட்கவா வேண்டும் ! அமெரிக்க டொலரெல்லாம் சவூதி றியாலாக மாறத்தொடங்கின

1953 ம் ஆண்டு சவூதி அரேபியாவின் எண்ணெய் வருமானம் 25 இலட்சம் டொலராக இருந்தது. அபரீதமான இந்த வருமானத்தைக் கண்டு மன்னர் அப்துல் அஸீஸ் திகிலடைந்தார். இந்த மிதமிஞ்சிய செல்வத்தால் மக்களின் இறை பக்தி குன்றி விடுமோ என்றெண்ணிக் கலங்கினார் . அவர் அஞ்சிக் கலக்கமுறும் அவ்விடயம் நிஜமாகி வருவதையும் நேரில் கண்டு கொண்டார்

என்ன செய்வதென்றறியாது யோசனையிலாழ்ந்தார். அதனால் அவருடைய உடல் நலிவுற்றது. கண்பார்வையும் மங்கியது. ஆறுதல் பெற விரும்பி தாயிப் நகருக்குக் குடிபெயர்ந்தார். உறக்கநிலையிலேயே 9. 11. 1953 ல் உயிர்நீத்தார். ( இன்னாலில்லாஹி...... )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஐந்து மனிதர்களைக் கொலை செய்ததுமட்டும் அல்லாமல் அவர்களின் மாமிசத்தையும் உண்டதாக அமெரிக்க வாசியான ALFRED G PACKER என்பவர் கி. பி. 1874 ம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டார். கதைச் சுருக்கம் இதுதான் :- அறுவர் சேர்ந்து ஓர் உல்லாசப்பயணத்தை மேற்கொண்டார்கள். அவர்கள் எடுத்துச் சென்ற உணவு முடிவடைந்து விட்டது அவர் களில் SWAN என்பவரை அறுத்து எல்லோரும் சாப் பிட்டார்கள். அவரையடுத்து MILLER, HUMP-HERY, NOON, BELL, ஆகியோர் முறையே கொல்லப்பட்டு உண்பதற்கு உணவானார்கள். எஞ்சி யிருந்த ஆசாமி எதிரியானார்.

2. பெற்றோல் வாகனம் முதன்முதலாக 27.01. 1895 ம் ஆண்டு ஜேர்மனியில் ஓடியது. அதைச் செலுத்தி யவரின் பெயர் : BENZ

3. உலகில் முதலாவது பெண் டாக்டர் : BLACKWELL ELIZABATH என்பவராவார். வெளியேறிய திகதி 23.01.1849

4. மின்சாரக் கதிரையில் இருந்தவாறு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்ட முதலாவது மனிதன் : WILLIAM KEMLER.

5. கொடுங்கோல் மன்னன் என்ற கெட்ட பெயரை முதன் முதலாகச் சம்பாதித்துக் கொண்டவன் NIMROD என்ற அரசனாவான். இஸ்லாமியச் சரிதைகளில் நமறூத் என அழைக்கப்படும் மன்னன் இவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARA KU NORTH
MARUTHA

6. முதன்முதலாக முத்திரையை ( Stamp ) வெளியிட்டது பிரித்தானியா நாடாகும். வெளியிட்ட திகதி : 6. 5. 1840.

7. உலகில் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமை யைப் பெற்றுக்கொண்டவர் : எமது நாட்டின் முன்னை நாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக ஆவார், ( இன்றைய எதிக்கட்சித் தலைவி ) இரண்டாம் நபர் : இஸ்ரவேல் நாட்டைச் சேர்ந்த Mrs GOLDA MEIOR மூன்றாம் நபர் :திருமதி இந்திரா காந்தி. நான்காம் நபர் : Mrs. MARGRET THATCHER. ( இங்கிலாந்து ) இவர்கள் ஆட்சி செய்த நான்கு நாடு களும் இ என்ற எழுத்திலேயே ஆரம்பிக்கின்றன.

8. முஸ்லிம் நாடு ஒன்றில் முதலாவது பெண் பிரதம மந்திரி என்ற பெருமையைத் தேடிக்கொண்டவர் பெனாஸிர் பூட்டோ ஆவார். நாட்டின் தலைவராக இருக்கும்போது குழந்தை ஈன்றெடுத்த பெருமையும் அவருக்கே செல்கிறது. ( இன்று )

9. ( இன்றுள்ளபடி ) என் பெற்றோர் இருவரும் பிரதமர்கள் என்று பெருமிதம் கொள்ளக்கூடியவர் ஒருவர்தான் உலகில் உண்டு. நான் ஒரு பிரதமர், என் அம்மா ஒரு பிரதமர், என் அம்மாவின் அப்பா ஒரு பிரதமர் என்று பெருமை பேசக்கூடியவரும் ஒருவர்தான் உண்டு. நான் ஒரு பிரதமர், என் தந்தை ஒரு பிரதமர் என்று பெருமையாகக் கூறக்கூடியவரும் ஒருவர்தான் உண்டு இம் மூவரும் யார் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. உலகிலே மிகவும் குறுகிய மனிதன் : இந்திய நாட்டைச் சேர்ந்த GHUCAM AHAMED DAR என்பவராகும். இவரின் உயரம் 71 செ. மீ. மட்டுமே ; கி. பி. 1985ல் மரணமாகிவிட்டார், இவருக்கு அடுத்த படியாக மதிப்பிடப்பட்டிருந்தவர் : ANTONIO LOPES FERRIER என்பவர். இவரின் உயரம் 75 செ. மீ. ஆகும். கி. பி. 11. 2. 1989ல் இவரும் மரணமானார்.

11. ஒரு மனிதனுடைய இருதயத்தை அகற்றிவிட்டு அதற்குப்பதிலாக வேறொரு மனிதனின் இருதயத்தைப் பொருத்திவிடும் இருதய மாற்றுச் சத்திர சிகிச்சை ( Heart Transplant ) முதன்முதலாக கி. பி. 1967ம் ஆண்டு நடைபெற்றது. அதனை வெற்றிகரமாகச் செய்து முடித்தவர் Dr. CHRISTIAN BERNARD என்ற அமெரிக்க வைத்தியர். இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட வைத்திய சாலையின் பெயர் : SCH-UR HOSPITAL என்பதாகும். இருதயம் பொருத்திவிடப்பட்டவர் சொற்ப மணித்தியாலங்களே உயிர் வாழ்ந்தார்,

12. உலகக் குத்துச்சண்டை வீரன் என்ற பட்டத்தைத் தொடர்ந்து பல வருடங்களாகப் பெற்றிருந்தவர், ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த முஹம்மது அலி என்பவராகும். இவர் புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர் முன்பு அவருக்குச் சூட்டப்பட்டிருந்த நாமம்: CASSIUS CLAY என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இந்திய நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஒரேயொரு முஸ்லிம் : ஜனாப் ஸாகிர் ஹுசைன்.

14. ஒரு குழந்தை பிறந்ததும் சுமார் இரண்டு வருடங்கள் கழிந்த பின்புதான் பேசத் தொடங்கும். ஆனால், HEINECKEN CHRISTIAN HEINRICH என்ற பையன் ( கி. பி. 1721 -- 1725 ) தனது பத்தாவது மாதத்திலேயே பேசத் தொடங்கிவிட்டான்.

15. கி. பி. 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், இத்தாலி நாட்டில், ஒரு பெண் ஒரே சூலில் 8 குழந்தைகளைப் பிரசவித்தாள். உலகில் இதுவரை நடைபெற்ற பிரச வங்களில் இதுவே றெக்கோட் ஆகும்.

16. Dr கிரோஷியஸ் என்பவர் தனது 16 வயதிலே கலா நிதிப் பட்டம் பெற்றார்.

17. இயேசுநாதரின் பிறப்புக்கு முன்னும் அவரின் மறை வுக்குப் பின்னும் சீவித்த ஒரு தத்துவஞானி : PHILO என்பவராவார்.

18. இலங்கைவாழ் முஸ்லிம்களில் Sir பட்டம் பெற்றோர்
   1. சேர் முஹம்மது மாக்கான் மார்க்கார்.
   2. ,, A. R. A. றாசிக் பரீத்.
   3. ,, A. W. M. அமீர் ( கி. பி. 1990 )

19. இலங்கையின் முதலாவது முஸ்லிம் நீதிபதி ஜனாப் M. T. அக்பர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. எமது நாடு சுதந்திரம் பெற்றதின் பின், முதலாவது பாராளுமன்ற அமர்வு கூடியபோது, ஜனாப் H. S. இஸ்மாயில் என்பவர் நாட்டின் முதலாவது சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டார். அன்று அவர் புத்தளத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு சபை சென்றிருந்தார்.

21. எமது நாட்டில் முதன்முதலாக வெளியேறிய முஸ்லிம் புறக்டர் அறிஞர் சித்திலெப்பை ஆவார். முதன்முதலாக வெளியேறிய முஸ்லிம் அற்வொகேற் ஜனாப் அப்துல் காதர் ஆவார். நீதிமன்றத்தினுள் முஸ்லிம்கள் தொப்பியை அணியமுடியாது என்ற சட்டத்தை எதிர்த்து, இங்கிலாந்து சென்று அன்றைய அரசனைச் சந்தித்து, தொப்பி என்பது முஸ்லிம்களின் உடையின் ஒரு பகுதி என்பதை மன்னருக்கு விளக்கிக்கூறி அணியலாம் என்ற வெற்றியோடு நாடு திரும்பிய அப்துல் காதர் இவரே. தேசிய வைபவங்களில், ஆட்சியாளர்களை வரவேற்பதற்காகத் தங்கள் கைகளை உயர்திக் கும்பிடும் எமது இன்றைய முஸ்லிம் தலைவர்களுக்கும், துருக்கித்தொப்பி அப்துல் காதர் அவர்களுக்கும் இஸ்லாமியப் பற்றில் எவ்வளவோ வித்தியாசம் தெரிகின்றதல்லவா ?

22. ஜூரிமார் முன்னிலையில் கொலை வழக்கு விசாரிக்கப்படும்முறை கி. பி. 1807ம் ஆண்டு எமது நாட்டில் நடைமுறைக்கு வந்தது. அவ்வேளை, இங்கிருந்த பிரதம நீதியரசரின் பெயர் : Sir ALEXANDER JO HNSTON.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. எமது நாட்டில் முதன் முதலாகப் புகையிரதம் ஓடியது 27-12-1864 ம் திகதியாகும். அன்றையப் பிரயாணம் கொழும்பிலிருந்து அம்பேபுஸ்ஸ என்ற ஊர் வரையும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

24. ஐக்கிய நாடுகள் சபை 25-10-1945ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இதில் இலங்கை அங்கத்துவம் பெற்ற திகதி 14-12-1955 ஆகும்.

25. நம் நாட்டில் முதன் முதலாகத் தேயிலை நாட்டப்பட்ட தினம் 03-11-1867 ஆகும். நாட்டியவர் பெயர் JAMES ROLLER என்பதாகும்.

26. குறிப்பிட்ட சில ஆண்டுகளில் எமது நாட்டிலிருந்த பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பற்றிய விபரங்கள்.

| தொ. இ. | ஆண்டு | பாடசா. | ஆசிரி. | மாணவ. |
|---|---|---|---|---|
| 1 | கி. பி. 1900 | - | - | 2,09,645 |
| 2 | ,, 1930 | - | - | 5,39,755 |
| 3 | ,, 1940 | 3515 | 21,570 | - |
| 4 | ,, 1943 | - | - | 7,95,000 |
| 5 | ,, 1945 | - | - | 10,00,000 |
| 6 | ,, 1950 | - | - | 13,49,345 |
| 7 | ,, 1958 | 7619 | 48,342 | - |
| 8 | ,, 1960 | - | - | 21,92,379 |
| 9 | ,, 1970 | - | - | 26,28,383 |
| 10 | ,, 1977 | 8682 | 1,25,000 | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. கி.பி. 1815 ம் ஆண்டிலேதான் எமது நாட்டுத்தபாற் சேவை ஆரம்பமானது. முதலில்: கொழும்பு, காலி, மன்னார், மாத்தறை, திரிகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு இடங்களிலும் தபாற்கந்தோர்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஓர் ஊரிலிருந்து இன்னுமோர் ஊருக்குத் தபாற் பொதிகளைச் சுமந்து சென்ற அன்றைய தபாற்காரனின் கையில், பாதுகாப்பிற்காக ஓர் ஈட்டி இருந்தது. மிருகங்களை வெருட்டுவதற்காக அதிலே ஒரு மணி கட்டப்பட்டிருந்ததாம்.

கி. பி. 1832ம் ஆண்டு (பாதைகள் ஏற்படுத்தப்பட்டபின்) குதிரை வண்டியில் தபாற் பைகள் அனுப்பப்பட்டன. குறிப்பாகக் கண்டிக்கு மட்டும் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டது. புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டபின், ஒரு முன்னேற்றம் காணப்பட்டது.

கி. பி. 1857ம் ஆண்டுதான் முத்திரைப் பிரயோகம் நடைமுறைக்கு வந்தது. ஆனால், அன்றைய முத்திரைகள் பிரித்தானிய நாணயப் பெறுமதியில் இருந்தன. இலங்கை நாணயத்திற்கு வாங்கக்கூடிய முத்திரைகள் கி. பி. 1872ம் ஆண்டிலேதான் விற்பனைக்கு விடப்பட்டன. தபால் அட்டையும் இவ்வாண்டிலேதான் பாவனைக்கு வந்தது. ஆங்கில மொழியுடன் சிங்களம், தமிழ், மொழிகள் கலந்த சொற்கள் பொறிக்கப்பட்ட முத்திரைக 14. 5. 1958ம் ஆண்டுதான் முதன்முதலாக வெளியாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KA... KU ...TH



தபாற்பெட்டி முதன்முதலாக கி. பி. 1904ம் ஆண்டு கொழும்பு, கண்டி, காலி, நுவரேலியா, ஆகிய நான்கு ஊர்களிலும் நிறுவப் பட்டன. ஆனால் இன்று (27. 12. 1990 வரை) எமது நாட்டில் 15,782 தபாற்பெட்டிகள் நாம் புகுத்தும் கடிதங்களை விழுங்கிக்கொண்டிருக்கின்றன.

உப - தபாற் கந்தோர்கள் முதன்முதலாக கி. பி. 1921ம் ஆண்டு அக்மீன, ஆனமடுவ, கிரியல்ல, சிலாபத்துறை, திவிலுப்பிட்டிய, மூதூர், ஆகிய ஆறு ஊர்களிலும் திறக்கப்பட்டன. இன்று எமது நாட்டில் 3347 உப தபாற் கந்தோர்கள் உள்ளன.

இவற்றுடன் 79 ஏஜன்சி தபாற் கந்தோர்களும் இயங்குகின்றன. (ஏஜன்ஸி தபாற்கந்தோர் 27. 7. 90ல் அறிமுகஞ் செய்யப்பட்டது.)

எயா மெயில் சேவிஸ் முதன்முதலாக 28. 2. 1938ல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று எமது நாடு 71 நாடுகளுக்கு எயா மெயில் நேரடியாக அனுப்புகிறது; அதே வேளை 63 நாடுகளிலிருந்து நேரடியாக எயா மெயில் பெறுகிறது. 516 தபாற்கந்தோர்களில் வேலை செய்யும் சுமார் 6745 தபாற்காரர்கள், மலைபோல் குவியும் கடிதங்களைத் தரம்பிரித்து மக்கள் கையில் கொடுக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. அராபியர் திசையறிகருவியை அஸ்துர்லாப் என அழைக்கின்றார்கள். கி. பி. 984ம் ஆண்டு இஸ்ஃபஹான் எனும் ஊரைச் சேர்ந்த அஹ்மது, முஹம்மது ஆகியோர் இணைந்து திசையறி கருவியை உண்டாக்கினார்கள். அரும் பொருளாகிய இக் கருவி Oxford சர்வகலா சாலையில் இன்னும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

29. அல்குர்ஆன் முதன்முதலாக கி. பி. 1485ல் அச்சிடப் பட்டது. அச்சிட்டவரின் பெயர்: அலிஸண்றோ டிபகானி என்பதாகும்.

30. HOUDAS, MARCAIS, ஆகிய இரு அறிஞர்களும் இணைந்து, ஸஹீஹுல் புஹாரி என்னும் எமது கிரந்தத்தைப் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளார்கள்.

31. குர்ஆனை மேனாட்டுப் பாஷைகளில் மொழிபெயர்த்தவர்கள் :-

1. DU REYER ... கி. பி. 1647ல் (பிரஞ்சுமொழி)
2. GEORGE SALE ... கி. பி. 1734ல் ,,
3. Prof. E. H. PALMER ,, 1876ல் ,,
4. R. BLACHERE ... கி. பி. 1952ல் ,,

32. நபி நூஹ் (அலை) அவர்களுடைய (பைபிள் பெயர்: நோவா) கப்பல் எனக் கருதப்படும் பேழை யொன்று, U. S. S. R - துருக்கி எல்லையிலுள்ள அர்ராத் என்னும் மலையடிவாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கப்பலின் ஒரு பகுதி மட்டுமே தென்படுகிறதாம். மற்றப் பகுதி பனிக்கட்டிக்குள் மறைந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARAVAKU NORTH
MARUTHAMUNAI

33. GOETHE என்பவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஒரு கவிஞரும் தத்துவ சாஸ்திரியுமாவார். West Ostiliture Divan என்னும் காவியத்தை அவர் எழுதியுள்ளார். அக் கவிதை பிஸ்மில் என்பதைக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்.

34. U. S S. R. நாட்டு நாவலாசிரியரான டால்ஸ்டாய் என்பவர் தனது பண்ணையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். அவருடைய சட்டைப் பையினுள் ஒரு புத்தகம் காணப்பட்டதாம். அந் நூலின் தலையங்கம் : முஹம்மது நபியின் பொன்மொழிகள் என்பதாகும்.

35. உலகப் புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞரான ஷேக்ஸ்பியர் பிறந்த இடம் : Startford - on - Avon என்பதாகும். இவ்வூர் பிரித்தானியா தேசத்தின் Warwickshire என்ற மாவட்டத்தில் உள்ளது.

36, சுவிட்ஸலாந்து நாட்டின் தலைநகரான ஜெனீவா நகரில், சர்வதேச இயக்கங்கள் மூன்றின் தலைமைக் காரியாலயங்கள் உள்ளன. அவை .--

1. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம். (I. L. O)
2. ,, சுகாதார ,, (W. H: O.)
3. ,, செஞ்சிலுவைச் சங்கம் (I. R. C. S.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. இரண்டாம் மகா யுத்தத்தின் போது ஜப்பான் தேசம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. அங்குள்ள ஹிரோஷிமா என்ற பகுதி முற்றிலும் அழிக்கப்பட்ட ஒரு இடமாகும்.

38. தேர்தல் எனும் போர்க்களத்திலே குதித்து மேடைப் பேச்சு எனும் வேட்டுகளைத் தீர்த்து, அதர்ம வழியில் வெற்றி யீட்டி, நாடாளுமன்றஞ் சென்று, நாலு பேருக்கு நானே ராஜாவாக இருக்கவேண்டும் என்ற எண்ணங்கொண்டு அரசியலில் இறங்கும் அற்ப மனிதர் ஆயிரமாயிரம் பேர் அவனியில் இருந்துள்ளார்கள் -- இருக்கின்றார்கள் -- இருக்கப்போகின்றார்கள். ஆனால், இதற்கு மாறான எண்ணங்கொண்ட மனிதர்களும் உலகில் இருந்துள்ளார்கள்.

1. பங்களாதேஷ் நாட்டின் முதல் பிரதம மந்திரி : ஜனாப் முஜிபுர் றஹ்மான். (சிறையில் இருந்தபோது)

2. இந்திய நாட்டைச் சேர்ந்த ஜோர்ஜ் பேர்னாட். (சிறையில் இருந்தபோது. பெற்ற மேலதிக வாக்கு 3,34,000)

3. மக்கள் திலகம் M. G. இராமச்சந்திரன். (அமெரிக்காவில் சிகிச்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது)

இவர்களுக்கெல்லாம் பொதுமக்களே கட்டுப் பணம் செலுத்தி, பொதுமக்களே தேர்தல் பிரச்சாரஞ்செய்து, பொதுமக்களே வெற்றியைக் கொண்டு போய் கழுத்தில் கட்டிவிட்டவர்கள். ஒப்பிடும்போது வியப்பாக இல்லையா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. கோஹினூர் வைரம் என்பது உலகப் புகழ் பெற்ற ஒன்றாகும். இது, ஹைதரபாத் மாநிலத்திலுள்ள கோல்க்கொண்டா என்ற வைரச் சுரங்கத்திலிருந்து பெறப்பட்டதாகும்.

40. ஒலிம்பிக் விளையாட்டு சிறிது காலம் தூர்ந்துபோய்க் கிடந்தது B. P. மவ்பர்டின் என்பவர் கி. பி. 1896ல் அதற்குப் புத்துயிர் கொடுத்தார்.

41. ஐந்து மனிதர்களைக் கொலை செய்து, அவர்களின் மாமிசத்தைப் புசித்ததாக அமெரிக்க வாசியான ALFRED G. PACKER என்பவர், கி. பி. 1874ம் ஆண்டு குற்றஞ் சாட்டப்பட்டார். கொலைகளின் சுருக்கம் இதுதான் :- ஆறு பேர் சேர்ந்து ஓர் உல்லாசப் பயணத்தை மேற்கொண்டார்கள். எடுத்துச் சென்ற உணவுப் பொருட்கள் முடிந்தன. SWAN என்பவரை அறுத்து எல்லோரும் உண்டார்கள். அவரையடுத்து MILLER என்பவர் உணவானார். இவ்வாறு HUMPHERY, NOON, BELL ஆகியோர் பசி போக்கும் பதார்த்தமானார்கள். எஞ்சியிருந்த ஒரேயொருவர் எதிரியானார்.

42. அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த JOHN F. KENNEDY என்பவர் LEE HARVEY OOSWELD என்பவனால் 22. 11. 1963ல் சுடப்பட்டார். Parkland Memorial Hospital என்ற வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போது மரணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் வயதான அவருடைய விதவைப் பெண் JACKQULEIN சீமாட்டி, கிரேக்க தேசத்துப் பெரும் கோடீஸ்வரரான ONASIS என்ற வயோதிபரை மறுமணஞ் செய்தார். (பல மில்லியன் பெறுமதியான சொத்துக்கு ஒரு பிள்ளையும் கிடைத்தது.)

43. மேலே கூறப்பட்ட கெனடியின் மூத்த சகோதரரான ROBERT F. KENNEDY என்பவர் அமெரிக்க செனற் சபையில் அங்கம் வகித்தார். SIRHAN BISHARA SERHAN என்பவனால் 5. 9. 1968ல் அவரும் கொல் லப்பட்டார். Catholic Good Samaritan Hospital என்ற வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும்போது அவர் உயிர்நீத்தார். எஞ்சி யிருந்த ஒரேயொரு சகோதரக் கெனடி அரசியலில் ஈடுபட மறுத்துவிட்டார்.

44. ஒட்டிப் பிறத்தல், அங்கக் குறைபாடு, மேலதிக உடலுறுப்பு, போன்ற அதிசயப் பிறப்புக்களை நாம் கேள்விப்பட்டுள்ளோம். அறுவை சிகிச்சை மூலம் இவை ஓரளவு நிவர்த்திசெய்யப்படுகின்றன. Melbourne நகரிலுள்ள சிறுவர் வைத்தியசாலை ஒன்றில், 1990ம் ஆண்டு மார்ச் மாதம், வினோதக் குழந்தை ஒன்றுக்கு அரிய அறுவச்சிகிச்சை நடைபெற்றது. அதாவது :- அக் குழந்தையின் இருதயம் உடலின் வெளிப்புறத்தில் அமைந்திருந்ததாம். ஏழு மணித்தியால ஒபரேஷன் நடைபெற்றபின் அந்த இருதயம் உடலுக்குள் (வைக்கப்பட்டு) பொருத்தப்பட்டதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. 1990ம் ஆண்டு மார்ச் மாதம், துருக்கி நாட்டில் ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தியின் வயிற்றிலிருந்து சிசேறியன் ஒபரேஷன் மூலம் ஓர் ஆண் குழந்தை மீட்கப்பட்டது. இதில் வினோதம் என்னவெனில், அச் சிறுமி திருமணம் ஆகாதவளாம். அந்த ஒப ரேஷனின் வைத்தியக் குழுத் தலைவர் Dr. முஹம்மது தாலேக் என்பவர் இதனையிட்டுக் கருத்துத் தெரி விக்கையில், வைத்திய சஞ்சிகைகளின் மூலம் யான் அறிந்தவரை ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி குழந்தை யொன்றுக்குத் தாயாகியுள்ளாள் என்று கூறியுள்ளார்.

46. Dr. W. தஹாநாயக்கா அவர்கள் கல்வி மந்திரியாக இருந்த காலத்தில் (இன்று மிகவும் வயோதிபர்) தமிழ், முஸ்லிம், M. P. க்கள் அனைவரையும் கூட்ட மொன்றுக்கு வருமாறு அழைத்தார். 27. 3. 1958ல் கூட்டம் அமைச்சில் நடைபெற்றது. முஸ்லிம்களுக்குப் புறம்பான பாடசாலை என்ற தலைப்பில் கலந்துரை யாடல் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செனட்டர் நடேசன் எழும்பி, சிங்களம், தமிழ், என்ற மொழி வேறுபாட்டில் இயங்கும் பாடசாலைகளைச் சமய அடிப்படையில் பிரிப்பதற்கு மந்திரி அவர்கட்கு என்ன அதிகாரம் உண்டு? இது சரியா? என்ற கேள்விகளை எழுப்பினார். மந்திரியவர்கள் தகுந்த பதிலளித்தார்.

இலங்கை - வாழ் முஸ்லிம்களின் இதயங்களிலே என்றுமே மாறாத ஓர் இடத்தைப் பிடித்திருக்கும் சேர் ராசிக் பரீத் அவர்கள் எழும்பி கடவுளுக்கு ஆறு கைகள் உண்டென முஸ்லிம் சிறார்களுக்குப் போதித்ததை ஸ்ரேற் கவுன்சில் காலத்திலேயே நான் நேரடியாகக் கண்டேன். எனவேதான், அன்றும் இன்றும் நான் வாதாடுகிறேன் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

சுபஹானல்லாஹ்! வேறு மத-வழிபாட்டு ஸ்தலங்களுக்குள்ளே போய், அங்குள்ள தெய்வங்களுக்கு முன் மலர்த்தட்டு வைத்து சிரம் தாழ்த்தும் இன்றைய முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஈமானுக்கும், சேர் ராசிக் பரீத் அவர்களைப் போன்ற அக்கால முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஈமானுக்கும்; இமய மலைக்கும் எலுமிச்சம் பழத்துக்குமுரிய வேறுபாடல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. Post Master என்ற ஆங்கிலப் பதத்தை P. M. எனச் சுருக்கி நாம் கூறுகிறோம். இவ்விதம், அதிகமான ஆங்கிலச் சொற்றொடர்கள் சுருக்கிக் கூறப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு நாம் காண்போம்.

| | |
|---|---|
| a. m. | ante meridium (காலை நேரம்) |
| A. G. M. | Annual General Meeting |
| ,, | Assistant General Manager |
| A.R. | Annual Report |
| B.D. | Bachelor of Divinity |
| B.Litt. | Bachelor of Letters |
| BMICH | Bandaranayaka Memorial International Conference Hall |
| BoC. | Bank of Ceylon |
| C.D.B. | Coconut Development Board |
| ,, | Crime Detective Bureau |
| C. I. D. | Criminal Investigation Department |
| C. R. | Check Roll |
| D. C. L. | Doctor of Civil Law |
| D. D. | Doctor of Divinity |
| D. Lit. | Doctor of Literature |
| D. Mus. | Doctor of Music |
| DPL. | Diplomatic |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| FAMYS | Federation of Assemblies of Muslim Youths of Sri Lanka. |
| F. R. | Financial Regulation |
| F.R.C.S. | Fellow of the Royal College of Surgeons. |
| G.C.S.U. | Government Clerical Service Union. |
| G. M. T. | Greenwich Mean Time. |
| I. M. F. | International Monetary Fund. |
| I. R. C. | Inland Registered Criminal. |
| I. Q. | Inteligent Quotient. |
| J. M. O. | Judicial Medical Officer. |
| LL. B. | Bachelor of Laws. |
| LL. D. | Doctor of Laws. |
| L. R. C. | Land Refrom Commission. |
| M.B.B.S. | Bachelor of Medicine and Bachelor of Surgery. |
| M. W. L. | Muslim World League. |
| N.A.T.O. | North Atlantic Treaty Organization. |
| N. B. | Nota Belle. ( ஊன்றிக் கவனிக்கவும் ) |
| O. P. D. | Out - door Patient Department. |
| O.P.E.C. | Organization of Petroleum Exporting Countries. |
| P.A.Y.E. | Pay As You Earn. |
| P. B. | People's Bank. |
| P. C. | Provincial Council |
| ,, | Police Constable |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARAVAKU NORTH
MARUTHAMUNAI

| | |
|---|---|
| p. c. | post card |
| Ph. D. | Doctor of Philosophy |
| P. H. I. | Public Health Inspector |
| P. L. O. | Palestine Liberal Organization |
| p. m. | post meridium ( மாலை நேரம் ) |
| P. M. | Prime Minister |
| P. M. B. | Paddy Marketing Board |
| P. R. O. | Public Relation Officer |
| P. T. I. | Press Trust of India |
| P. T. O. | Please Turn Over |
| P. W. D. | Public Works Department |
| R. M. | Regional Manager |
| ,, | Residential Manager |
| SAARC | South Asian Association for Regional Co-operation |
| T. A. | Technical Assistant |
| TB. | Tuberculosis |
| U. N. O. | United Nations Organization |
| UNESCO | ,   ,   Educational, Scientific, and Cultural Organization |
| V. I. P. | Vary Important Person |
| V. P. P. | Value Payable by Post |
| WAMY | World Assembly of Muslim Youths |
| YMBA | Young Men Buddhist Association |
| YMCA | ,   ,   Christian   , |
| YMMA | ,   ,   Muslim   , |

● ● ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இன்றைய உலகில் :-

   1. முஸ்லிம்கள் ( நூறு வீதம் வாழும் ) நாடுகள் ......48
   2. ,, பெரும்பான்மையாக ,, ,, ......15
   3. ,, சிறுபான்மையாக ,, ,, ......73

   பொதுவாகக் கூறின், சொற்ப முஸ்லிம்களாவது இல்லாத நாடு **இல்லை** என்றே சொல்லலாம்.

2. உலகிலுள்ள நாடுகளில் 42 நாடுகள் **வறிய நாடுகள்** எனக் கணிக்கப்படுகின்றன.

3. ஜனங்கள் கூடுதலாக உள்ள ஆறு நாடுகள் :-

   1. சீனா ...... 107,30,00,000
   2. இந்தியா ...... 73,00,00,000
   3. U. S. A. ...... 27,20,00,000
   4. இந்தோனேஷியா ...... 15,80,00,000
   5. U. S. S. R. ...... 15,40,00,000
   6. ஜப்பான் ...... 13,20,00,000

4. உலகில் மிகவும் கூடுதலான தீவுத் தொகுதிகளைக் கொண்டுள்ள நாடு இந்தோனேஷியா. இந்த நாடு 13,677 தீவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில், ஏறக்குறைய 6100 தீவுகளுக்கு மட்டுமே பெயர் சூட்டப்பட்டுள்ளன. அவற்றிலும் சுமார் 1000 தீவுகளில் மாத்திரமே மக்கள் வசிக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARAVAKU NORTH
MARUTHAMUNAI

இத்தீவுக்கூட்டமானது, ஆசியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே கிழக்கு- மேற்காக சுமார் 3000 மைல்களுக்கும்; பசுபிக் சமுத்திரத்திற்கும், இந்து சமுத்திரத்திற்கும் இடையே வடக்கு-தெற்காக சுமார் 1300 மைல்களுக்கும் பரந்து கிடக்கின்றன.

5. பிரித்தானியாவுக்கு அருகிலுள்ள நெதர்லாந்து என்ற நாடு 96 தீவுகளைக் கொண்டுள்ளது. இவற்றை 300 பாலங்கள் இணைக்கின்றன. இதன் தலைநகரம்: Amsterdam என்பதாகும். இந்த நாட்டுக்குச் சொந்தமான Rotterdam என்ற துறைமுகம் ஐரோப்பாவில் முதலாம் இடத்தையும், உலக மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெறுகிறது.

6. Seycheiles Islands இந்து சமுதிரத்திலுள்ள ஒரு தீவுக்கூட்டமாகும். இதில் 92 தீவுகள் அடங்குகின்றன.

7. உலகிலுள்ள நாடுகளில் மிகவும் சிறியது: San Marino என்பதாகும். இது ஐரோப்பாக் கண்டத்தில் உள்ளது.

★ இன்றுள்ளபடி ( உத்தேசக் கணக்கு )

8. பிரித்தானியா நாட்டின் Cumberland என்ற மாநிலத்திலுள்ள Colder Hall என்னும் இடத்திலேதான் உலகின் முதலாவது அணுசக்தி நிலையம் ஏற்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. உலகில் மிக உயரமான தொங்கு - பாலம் : அமெரிக்காவிலுள்ள Colorodo நதியின் மேலாக அமைக்கப்பட்டுள்ள பாலமே. நீர்மட்டத்திலிருந்து 1050 அடி உயரத்தில் அது கட்டப்பட்டுள்ளது.

10 உலகிலுள்ள மிகப் பெரிய எரிமலை : Kilanea என்பதாகும். அதன் விட்டம் இரண்டு மைல், உயரம் 4088 அடி.

11. உலகில் ஆகக் கூடிய மழை வீழ்ச்சியைப் பெறும் இடம் : இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள சிறாப்புஞ்சி என்பதாகும்.

12. எண்ணெய் சுத்திகரிப்புக்குப் பிரபல்யமான இடம் : சவூதி அரேபியாவிலுள்ள Aden என்ற நகரமாகும்.

13. உலகில் மிக நீளமான குடைவுப் பாதை : Simplon Railway Tunnel என்பதாகும்.

14. Hollywood என்பது அமெரிக்க நாட்டின் கலிபோனியா மாநிலத்திலுள்ள ஓர் ஊரின் பெயராகும். படம் தயாரிப்பதற்கு இது மிகவும் பிரபல்யம் வாய்ந்த இடமாகும்.

15. ஆபிரிக்காவின் மேற்குக் கரையிலிருந்து சுமார் 1200 மைல்களுக்கப்பால் St. Helena என்றொரு தீவு உண்டு. இங்குதான் நெப்போலியனைச் சிறை வைத்ததாகக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. உலகப் படத்தில் வடமுனை என நாம் குறிப்பிடும் பகுதியிலேதான் நோர்வே நாடு உள்ளது. அந்த நாட்டில் ஓர் அதிசயம் என்னவெனில், கோடை காலத்தில் இரவு வேளையில் சூரியன் தென்படுமாம்.

17. சஹாராப் பலைவனத்தின் பரப்பு: 35,00,000 சதுர மைல்களாகும். இதன் கிழக்குப் பகுதியைத்தான் **லிபியன் பாலைவனம்** என அழைகின்றார்கள்.

18. வட ஆபிரிக்காவிலுள்ள **நுபியன் பாலைவனம்** 90,000 சதுர மைல்களாகும்.

19. தென் மத்திய ஆபிரிக்காவிலுள்ள **கலஹாரிப் பாலை வனம்** 20,000 சதுர மைல்களாகும்.

20. இலங்கையின் ஜனத் தொகையைப் பார்க்கினும் இந்தியாவின் ஜனத்தொகை 45 மடங்கு கூடியதாகும். அங்கே, ஒரு மில்லியன் மக்களுக்கு 12 என்ற விகிதா சாரத்தினில் சினிமாக் கொட்டைகள் உள்ளன; ஆனால் இங்கே ஒரு மில்லியனுக்கு 30 என்ற விகிதாசாரத்தில் உள்ளன, அங்கே 0.1 வீதம் மக்கள் நாளாந்தம் சினிமா பார்க்கிறார்கள்; ஆனால் இங்கே 0.9 வீத மக்கள் சினிமா பார்க்கிறார்கள். எப்படி நமது கெட்டித்தனம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. எமது நாட்டில் எரிமலை இல்லை. எனவே, எரிமலை வெடிப்பது, பூகம்பம் ஏற்படுவது, போன்ற பாரிய அனர்த்தங்கள் இங்கு நடைபெறவில்லை. ஆனால் வேறு நாடுகளில் இவை அடிக்கடி இடம்பெறுகின்றன. இவ் அனர்த்தங்களினால், இந்த மண்ணில் வாழ்ந்த எண்ணில்லா மாந்தர்கள் தங்கள் உயிர்களைப் பறி கொடுத்துவிட்டுத் தாமாகவே அடக்கஞ்செய்யப்பட்டு விட்டார்கள். தாங்கள் ஜீவித்த இந்த உலகில்' தங்கள் விருப்பத்திற்கமைய ஒரு சொல்லையாவது உச்சரிப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் -- தங்களின் விழிகளால் இந்தப் பார்தனை ஒரு முறை ஏறிட்டுப் பார்ப்பதற்குக்கூட ஒரு வாய்ப்பில்லாமல் மாண்டு போன அந்த மாந்தர்களின் சோக மரணத்தைப்பற்றி இங்கு வாசித்து, ஒரு சொட்டுக் கண்ணீரைக் காணிக்கையாக அவர்களுக்குச் செலுத்துவோம்.

(1) இதுவரை கணிக்கப்பட்டுள்ள பாரிய இயற்கை அனர்த்தங்களில் முதலாவது பூமியதிர்ச்சி கி. பி. 79ம்ஆண்டு நடைபெற்றுள்ளது.

(2) அதையடுத்து, 5ம் 6ம் 11ம் நூற்றாண்டுகளில் பாரதூரமான இயற்கை அழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

(3) கி. பி. 1169ம் ஆண்டு, Etna என்ற எரிமலை வெடித்ததின் காரணமாக Catania என்ற நகரம் முற்றாக அழிந்தது. அங்கிருந்த 15,000 மக்கள் மாண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 4 ) கி. பி. 1631ம் ஆண்டு, Vesuvias என்ற எரிமலை வெடித்தது. (விபரம்குறிப்பிடப்படவில்லை)

( 5 ) கி. பி. 1692ல் ஜாமிகாவில் ஒரு பூகம்பம் ஏற்பட்டது. இதனால், Port Royal என்ற இடம் கடலினுள் 240 அடிக்குக் கீழ் அமிழ்ந்தது; 3000 பேர் மாண்டனர்.

( 6 ) கி. பி. 1693ம் ஆண்டு Sicily என்ற பகுதியில் ஒரு பூகம்பம் ஏற்பட்டபோது, ஐம்பது ஊர்கள் அழிந்தன. Catania என்ற ஊர் 18,000 மக்களுடன் நீரில் மூழ்கியது.

( 7 ) கி. பி. 1775ல் போத்துக்கல் நாட்டில் Libson என்ற பகுதி பூகம்பம் ஒன்றினால் முற்றாகச் சேதமாகியது ; 40,000 பேர் மாண்டார்கள்.

( 8 ) கி. பி. 1860ல் தென் அமெரிக்கா விலுள்ள Mendoza என்ற பகுதி பூகம்பத்தினால் தாக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் மாண்டார்கள்.

( 9 ) கி. பி. 1868ம் ஆண்டு ஏற்பட்ட ஒரு பூகம்பம் Peru. Ecuador, ஆகிய பகுதிகளை மிகவும் மோசமாகத் தாக்கியது. அதிகமான கிராமங்கள் பாதிக்கப்பட்டன.

( 10 ) கி. பி. 1871,/72 காலப் பகுதியில் பாரிய பூமியதிர்ச்சி ஒன்று நடைபெற்றுள்ளது. பல ஆயிரக்கணக்கானோர் மாண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) கி. பி. 1882ல் சிரியா நாட்டிலுள்ள Aleppo என்ற நகரில் ஒரு பூகம்பம் ஏற்பட்டது. அங்கிருந்த ஜனங்களில் அரைப்பங்கினர் மாண்டனர்.

(12) கி. பி. 1883ம் ஆண்டு, ஜாவா நாட்டிலுள்ள Karakkatoa என்ற எரிமலை வெடித்தது; 30,000 பேர் கொல்லப்பட்டார்கள்.

(13) கி. பி. 1886ம் ஆண்டு, நியூஸிலாந்து நாட்டிலுள்ள Talawera என்ற எரிமலை வெடித்தது. உலகப் புகழ் பெற்ற Pink Terrace என்னும் அரண்மனையும், ஏனைய பல பெரிய கட்டிடங்களும் அழிந்தன. (உயிர்ச்சேதம் குறிப்பிடப்படவில்லை)

(14) 19ம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற ஒரு பூகம்பம், ஜப்பான் நாட்டை மிகவும் மோசமாகத் தாக்கியது. சுமார் மூன்று இலட்சம் மக்கள் தங்கள் இல்லங்களை இழந்தார்கள். (உயிர்ச்சேதம் குறிப்பிடப்படவில்லை)

22. நிகழும் 20ம் நூற்றாண்டில், இதுவரை இடம்பெற்ற பெரிய இயற்கை அனர்த்தங்கள் ஐம்பத்திரண்டு பதியப்பட்டுள்ளன.

(1) கி. பி. 1902ம் ஆண்டு, St. Pierre என்னும் இடத்திலுள்ள pelee என்ற எரிமலை வெடித்ததனால் பிணக்காடு என்று சொல்லும் அளவுக்கு அவ்விடம் மிகவும் மோசமாகக் காணப்பட்டது. உயிர்ச் சேதமோ மிகப் பாரதூரமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARAVAKU NORTH

(2) அதே ஆண்டில், Soufriete என்ற எரிமலை வெடித்ததனால், அது இருந்த தீவின் 1/3 பங்கு நிலம் அழிக்கப்பட்டது. மரணித்தோர் தொகை 10,000 ஆகும்.

(3) கி. பி. 1906ம் ஆண்டு, போமோசா என்ற பிரதேசத்தில் ஒரு பூகம்பம் ஏற்பட்டது. அது, அப் பகுதியிலுள்ள எல்லாக் கிராமங்களையும் பட்டிணங்களையும் அப்படியே நாசமாக்கியது.

(4) அதே ஆண்டு, Chile என்ற பகுதியில் ஒரு பூகம்பம் ஏற்பட்டது. அதன் விளைவாகச் சுமார் 20,000 பேர் கொல்லப்பட்டார்கள்.

(5) அதே ஆண்டு மூன்றாவது தடவையாக, San Francisco என்ற நகரில் ஏப்ரல் மாதம் ஒரு பூகம்பம் ஏற்பட்டது; 452 பேர் மரணித்தார்கள்.

(6) கி. பி. 1907ம் ஆண்டு, ஜாமிகாவிலுள்ள Kingston என்னும் இடத்தில் இடம்பெற்ற இயற்கை அழிவொன்றில் 700 பேர் உயிரிழந்தார்கள்.

(7) கி. பி. 1908ல், Messina என்னும் இடத்தில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தமொன்றில் ஓர் இலட்சம் பேர் இறந்தார்கள்.

(8) அதே ஆண்டு Valpraiso என்ற இடத்தில் ஏற்பட்ட ஒரு பூகம்பம், சுமார் 3,000 பேர்களின் உயிர்களைப் போக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY



இதன் பிறகு குறிப்பிடப்படும் 44 விடயங்களும், அவை நடைபெற்ற திகதி, நாடு, ஆகிய விபரங்களுடன் தரப்படுகின்றன. நடைபெற்ற இடத்தை இலகுவில் அறிந்துகொள்வதற்காக Richter Scale காட்டப்பட்டுள்ளது.

| நடைபெற்ற திகதி | நடைபெற்ற நாடு | R. Scale | மாண்டோர் |
|---|---|---|---|
| 28. 12. 1908 | இத்தாலி | 7. 5 | 83,000 |
| 13. 01. 1915 | ,, | 7. 5 | 29,000 |
| 16. 12. 1920 | சீனா | 8. 6 | 1,00,000 |
| 01. 09. 1923 | ஜப்பான் | 8. 3 | 99,000 |
| 22. 05. 1927 | சீனா | 8. 3 | 2,00,000 |
| 26. 12. 1932 | ,, | 7. 6 | 70,000 |
| 02. 03. 1933 | ஜப்பான் | 8. 9 | 2,000 |
| 15. 01. 1934 | இந்தியா | 8. 4 | 10,000 |
| 31. 05. 1935 | ,, | 7. 5 | 30,000 |
| 24. 01. 1939 | சிலி | 8. 3 | 28,000 |
| 26. 12. 1935 | துருக்கி | 7. 9 | 30,000 |
| 21. 12. 1946 | ஜப்பான் | 8. 4 | 2,000 |
| 28. 06. 1948 | ,, | 7. 3 | 5,131 |
| 05. 08. 1949 | ஈகுயேடர் | 6. 8 | 6,000 |
| 15. 08. 1950 | இந்தியா | 8. 7 | 1,530 |
| 18. 03. 1953 | துருக்கி | 7. 2 | 1,200 |
| 10. 06. 1956 | ஆப்கானிஸ்தான் | 7. 7 | 2,000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 02. 07. 1957 | ஈரான் | 7. 4 | 2,500 |
| 13. 12. 1957 | ஈரான் | 7. 1 | 2,000 |
| 29. 02 .1960 | மொறோக்கோ | 5. 8 | 12,000 |
| 21. 05. 1960 | சிலி | 8. 3 | 5,000 |
| 01. 09. 1962 | ஈரான் | 7. 1 | 12,230 |
| 26. 07. 1963 | யூகோஸ்லேவியா | 6. 0 | 1, 100 |
| 19. 08. 1966 | துருக்கி | 6. 9 | 2,520 |
| 31. 08. 1968 | ஈரான் | 7. 4 | 12, 000 |
| 28. 03. 1970 | துருக்கி | 7. 4 | 1,086 |
| 31. 05. 1970 | Peru | 7. 7 | 66,794 |
| 10. 04. 1972 | ஈரான் | 6. 9 | 5,057 |
| 23. 12. 1972 | நிகோரேகுவா | 6. 2 | 5,000 |
| 28. 12. 1974 | பாகிஸ்தான் | 6. 3 | 5,200 |
| 06. 09. 1975 | துருக்கி | 6. 8 | 2,312 |
| 04. 02. 1976 | Guatemala | 6. 5 | 72,778 |
| 06. 05. ,, | இத்தாலி | 6. 5 | 946 |
| 28. 07. ,, | சீனா | 8. 2 | 8,00,000 |
| ? 08. ,, | பிலிப்பைன்ஸ் | 7. 8 | 8,000 |
| 24. 11. ,, | துருக்கி | 7. 9 | 4,000 |
| 04. 03. 1977 | றுமேனியா | 7. 5 | 1,541 |
| 16. 09. 1978 | ஈரான் | 7. 7 | 25,000 |
| 12. 12. 1979 | ஈகுயேடர் | 7. 9 | 800 |
| 10. 10. 1980 | அல்ஜீரியா | 7. 3 | 4,500 |
| ? 10. 1980 | இத்தாலி | 7. 2 | 4,800 |
| 13. 12. 1982 | ஈமென் | 6. 0 | 2,800 |
| 30. 10. 1983 | துருக்கி | 7. 1 | 1,300 |
| 20. 09. 1985 | மெக்ஸிகோ | 6. 6 | 20,000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. இலங்கையில் பல ஆறுகள் உள்ளன. அவற்றில் மிக நீளமானது மகாவலி கங்கை. அதன் நீளம் சுமார் 205 மைல், ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இதனை மனதில் நிறுத்திக் கொண்டு, உலகிலுள்ள மிக நீளமான நதிகள் சிலவற்றின் பெயர்களையும் அவற்றின் நீளத்தையும் இங்கு காண்போம். (வரிசைப்படி)

1. Nile :- (நைல் நதி) ஆகக் கூடிய நீளமான நதி இதுவே. இது ஆபிரிக்காவில் உள்ளது; நீளம் 4000 மைல்களுக்கும் கூடுதலானது.

2. Amazan :- (அமேசன் நதி) தென் அமெரிக்காவில் உள்ள இந் நதி, 4000 மைல்கள் நீளமுடையதாகும்.

3. Yangtze Kiang :- (யாங்சிகியாங்) இது சீனாவில் உள்ளது. நீளம் 3500 மைல்.

4. Yenese :- இது சிபீரியாவில் உள்ளது. நீளம் 3300 மைல்.

5. Missouri :- (மிஸ்ஸூறி) இது அமெரிக்காவில் உள்ளது. பிறகு குறிப்பிடப்படும் மிஸிஸிபி என்ற நதியின் ஒரு கிளையாகும். இதன் நீளம் 3047 மைல். எனினும், 2400 மைல் வரை மட்டுமே பிரயாணம் செய்யலாம்.

6. Amur :- (அமூர் நதி) இதன் நீளம் 3000 மைல்

7. Congo :- (கொங்கோ நதி) ,, ,, ,,

8. Lena :- (லீனா நதி) சைபீரியாவிலுள்ளது; நீளம் 2800 மைல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. Mississippi : - ( மிஸிஸிபி ) அமெரிக்காவிலுள்ள இந் நதியின் நீளம் 2547 மைல். ஆயினும், 2000 மைல் வரை மட்டுமே பிரயாணம் செய்யலாம்.

10. Mackenzie : - ( மெக்கன்ஸீ ) இது கனடாவின் வடமேற் பகுதியில் உள்ளது; நீளம் 2350 மைல்.

11. Volga : - ( வொல்கா ) இது U. S. S. R. நாட்டிலுள்ளது. குறிப்பிட்ட சில காலத்தில் இந் நதி உறைந்துவிடும் ; நீளம் 2325மைல்.

12. Zambesi : - ( ஸாம்பஸி ) தென் கிழக்கு ஆபிரிக்காவில் உள்ளது. நீளம் 2200 மைல். இதில் 1700 மைல் வரை மட்டுமே பிரயாணம் செய்யலாம்.

13. St. Lawrence :- ( சென் லோறன்ஸ் ) வட அமெரிக்காவில் உள்ளது ; நீளம் 2100 மைல்.

14. Colorado : - ( கொலொறோடா ) வட அமெரிக்காவில் உள்ளது ; நீளம் 2000 மைல்.

15. Madeira : - ( மெடெய்றா ) அமேசன் நதியின் ஒரு கிளையாகிய இது பிரேஸில் நாட்டிலுள்ளது; நீளம் 2000 மைல்.

16. Parana தென் அமெரிக்காவிலுள்ளது ; நீளம் 2000 மைல்.

17. Yukan : - கனடாவில் உள்ளது ; நீளம் 2000 மைல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. உலகில் அதி உயர்ந்த மலைகள் சிலவற்றையும் காண்போம்.

1. Himalayas. (இமய மலை) உலகில் ஆகக்கூடிய உயரமான இம் மலை இந்தியாவின் வட எல்லையி லுள்ளது. இதற்குப் பல சிகரங்கள் உள்ளன. அவற்றில் மிக உயரமானது எவறெஸ்ற் அதன் உயரம் 29,028 அடியாகும்.
2. Godwin Aueston :- இரண்டாம் இடத்தை வகிக்கும் மலைச்சிகரம் இதுவே; உயரம் 28,250 அடி.
3. Kanchenjunga :- நேபாள நாட்டுக்கும் சிக்கிய நாட்டுக்கும் பொதுவில் உள்ளது; உயரம் 28,146 அடி.
4. Kamet :- உயரம் 25,477 அடி.
5. Aconcagua :- அமெரிக்காவிலுள்ளது; உயர்ந்த சிகரம் 22,835 அடி.
6. Andes :- (அந்தீஸ்) வட அமெரிக்காவிலுள்ள இம் மலைத்தொடர் 4500 மைல் வரை தொடர்ந்து செல்கிறது. இம் மலையில் 20,000 அடிக்கு மேற்பட்ட சிகரங்கள் பல உள்ளன.
7. Rocky Mountain :- (றொக்கி மலை) வட அமெரிக்காவிலுள்ளது. இதுவும் ஒரு மலைத் தொடரே. இதற்கும் பல சிகரங்கள் உண்டு. அவற்றில் மிக உயர்ந்தது Logan; உயரம் 19,850 அடி.
8. Cotapaxi :- தென் அமெரிக்காவிலுள்ள ஓர் எரிமலை. இதன் உயரம் 19,693 அடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. Caucasus : - கஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடையே சுமார் 950 மைல்கள் வரை நீண்டுள்ள ஒரு மலைத்தொடர். உயரமான பல சிகரங்கள் உள்ளன. மிக உயர்ந்ததின் பெயர் Elbruz என்பதாகும் ; நீளம் 18,463 அடி.

10. Popocatapelt : - அமெரிக்காவின் மெக்ஸிகோ மாநிலத்திலுள்ள பியூப்லா என்னும் ஊருக்கு அருகேயுள்ள ஓர் எரிமலை ; உயரம் 17,887 அடி.

11. Sierra Nevada de Merida : - தென் அமெரிக்காவின் மேற்கு வெனிஸுலா மாநிலத்திலுள்ள ஒரு மலைத்தொடர். உயர்ந்த சிகரங்கள் பல உள்ளன. மிக உயர்ந்தது 16,000 அடியாகும்.

12. Alps : - ஐரோப்பாவில் சுமார் 600 மைல்கள் வரை நிலைகொண்டுள்ள ஒரு மலைத்தொடர். இதன் சிகரங்களில் மிக உயரமானதின் பெயர் Mount Blanc எனப்படும் ; உயரம் 15,784 அடி.

13. Sierra Nevada :- அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள ஒரு மலைத்தொடர். இதன் சிகரங்களில் மிக உயர்ந்தது Whitney எனப்படும்; உயரம் 14,898 அடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. Atlas : - மொறோக்கோ, அல்ஜீரியா ஆகிய நாடுகளுக்கு ஊடாகச் சுமார் 1500 மைல்கள் நீளம் வரை அமைந்துள்ள ஒரு மலைத்தொடர். இதற்குப் பல சிகரங்கள் உள்ளன. அவைகளில் மிகக் கூடிய உயரம் 14,500 அடி.

25. சுவிட்சலார்ந்து வாசிகளான JEAN JACQUES DUNANT என்ற நீதிபதிக்கும், ANTOINETTE COLLADON என்ற அம்மையாருக்கும் பிறந்த பிள்ளைகளில் JEAN HENRY DUNANT என்பவர் மூத்த புதல்வன் ஆவார். இவர், கி. பி. 1859ம் ஆண்டு ஜுன் மாதம் ஒரு நாள், Solferino போர்க் களப் பக்கமாகப் போனார்.

(தங்களுடைய சொந்தத் தேவைக்காக அல்ல. ஆனால், யாரோ இட்ட கட்டளைக்காக) எதிரிகளோடு போர் செய்ததின் விளைவாக யுத்த களத்திலே வீழ்ந்து, அரைகுறையான உயிரோடு அவஸ்தைப்பட்ட வண்ணம் தங்கள் சொந்த உயிருக்கே போராடிக் கொண்டிருந்த போராளிகளின் பரிதாப நிலை கண்டு, அவருடைய உள்ளம் நெகிழ்ந்து உருகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KARAVAKU NORTH

பக்கத்துக் கிராமவாசிகளின் உதவி பெற்று, பதறித் துடித்துக்கொண்டிருந்த அந்தப் பாதி மனிதர்களுக்குத் தன்னாலான உதவிகளை எட்டு நாட்களாக அங்கு செய்தார். அவரில் ஊற்றெடுத்த பரோபகாரம், A Memory of Solferino என்னும் நூலை எழுத அவரைத் தூண்டியது. ( 1862ல் )

காயமடைந்து அல்லற் படுவோர்களுக்குத் தொடர்ந்து அவ்வுதவியைச் செய்ய அவர் உறுதி பூண்டார். தனது ஊரைச் சேர்ந்த ஐவரைச் சேர்த்துக்கொண்டு காயப்பட்டோருக்கு உதவி செய்யும் இயக்கம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினார். பிறகு இப் பெயர் உதவி புரியும் செஞ்சிலுவை இயக்கம் என மாற்றப் பட்டது. கி. பி. 1864ல், பதினாறு நாடுகளைச் சேர்ந்த மனிதாபிமானிகள் இதில் அங்கத்தவர்களானார்கள். ஈற்றில் இப்பெயர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என மாற்றப்பட்டது. இன்று இது உலகளாவிய ஓர் இயக்கமாகத் திகழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளகிய இதயங்கொண்ட -- மனித உயிரை மாணிக்கமாக மதித்த -- ஜீவகாருண்யம் வழிந்தோடிய அந்த ஜீன் ஹென்றி டுனான்ட் அவர்களின் ஜீவன் 30. 10. 1910ல் இந்த ஜெகத்தை விட்டும் பிரிந்தது. அவருடைய விருப்பத்திற்கமைய அவரை எரித்த சாம்பல், Zurich நகரிலுள்ள ஒரு சவக்காலையில் அடக்கஞ்செய்யப்பட்டது.

26. சுமார் 25 அல்லது 26 வருடங்களுக்கு முன்பு, HOPE எனப்பெயரிடப்பட்ட ஒரு கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டபடி நாலைந்து மாதம் கடலில் நிலைகொண்டிருந்தது. அது பிரயாணிகளையோ அல்லது வேறு எந்தப் பொருட்களையுமோ கொண்டுவரவில்லை. அப்படியென்றால் ?

சில நாடுகளில், குறிப்பிட்ட சில நோய்களைக் குணப்படுத்த அங்குள்ள வைத்தியர்கள் பெரும் கஷ்டப்பட்டார்கள். அதற்குக் காரணம் : அந்த நோய்களைக் குணப்டுத்துவதற்குரிய முழு வசதிகளும் இல்லாமல் இருந்தமையே. அதை அறிந்த உலக சுகாதார சபை ( W. H. O. ) சேவை மனப்பாங்குடன் ஒரு கைங்கரியத்தை மேற்கொண்டது. யாதெனில் :-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4966

முன்னேறிய நாடுகளிலிருந்து மிகத் திறமையான வைத்தியர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து, (பல தரப் பட்டவர்கள்) சீரான வைத்தியஞ் செய்யத் தேவை யான மருந்து வகைகளையும் உபகரணங்களையும் ஒரு கப்பலில் ஏற்றி, நாடு நாடாகச் சென்று; நாட்பட்ட அந் நோய்களைக் குணமாக்கும்படி வேண்டி அவர்களை அக் கப்பலில் அனுப்பியது. அந்தப் பணியை மேற்கொண்ட வைத்தியர்கள் வந்த கப்பலே அது.

நடமாடும் அச் சேவைக்கு: HEALTH OPPORTUNITY FOR PEOPLE EVERYWHERE என அவர்கள் நாமமிட்டார்கள். அச் சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டே அந்தக் கப்பலுக்கு HOPE எனப் பெயர் சூட்டினார்கள். ஆங்கில மொழியில் HOPE என்றால் நம்பு/ நம்பிக்கை என அர்த்தமாகும். எனவே, அக் கப்பலுக்குச் சூட்டப்பட்ட பெயர் எவ்வளவோ பொருத்தமானதல்லவா ?

அக்கரைப்பற்றுக் கிராமத்தைச் சேர்ந்த இரு ஆண்களும் பத்து வயதுச் சிறுமி ஒருத்தியும், அந்தக் கப்பலில் வந்த வைத்தியர்களிடம் சிகிச்சை பெறும் வாய்ப்பைப் பெற்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கோள் | விட்டம் | சூரியனிலிருந்து | சூரியனைச் சுற்றிவர |
|---|---|---|---|
| புதன் | 3,100 மைல் | 3,59,00,000 மைல் | 88 நாட்கள் |
| வெள்ளி | 7,700 „ | 6,72,00,000 „ | 225 „ |
| பூமி | 9,290 „ | 9,29,00,000 „ | 365 1/4 „ |
| செவ்வாய் | 4,140 „ | 14,16,00,000 „ | 687 „ |
| வியாழன் | 86,800 „ | 48,33,00,000 „ | 12வருடங் |
| சனி | 7,500 „ | 88,62,00,000 „ | 30 „ |
| யுரேனியஸ் | 32,000 „ | 1,78,30,00,000 „ | 84 „ |
| நெப்டியூன் | 27,000 „ | 2,79,40,00,000 „ | 165 „ |
| புளூட்டோ | 3,600 „ | 3,67,00,00,000 „ | 249 „ |

- முற்றும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4966

PUBLIC LIBRARY
KARA KU
MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED 1000 COPIES BY M. A. ABDUL GANY
OF AKKARAIPATTU 05.
AT I P C PRINTERS, AKKARAIPATTU.

கிடைக்குமிடம் :

கூட்டுறவுக் கடை,
அக்கரைப்பற்று மத்திய கல்லூரி,
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org